முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1096

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

29.09.2022, வியாழக்கிழமை

1. அறமெனும் வேலிகொண்ட அரங்கனே
அருளாக ஆற்றல்புரிகின்ற தேசிகனே
வரம்தந்து உலகை மீட்பேன் என
வள்ளலாய் வாழுகின்ற குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 12ம் நாள், 29.09.2022 வியாழக்கிழமை)
வரமென இந்த கலியுகத்தில்
வள்ளலாக வாழும் ஞானி அரங்கனே
3. திறம்பட உலகோரை மீட்டு
தெய்வபலமிக்கவர்களாக ஆக்கி இனிதே
இந்த உலகில் ஞானயுகமாற்றத்தை செய்து முடிப்பேன்
ஆகவே அரங்கன் வழியை தொடர்ந்து
4. அகிலமெல்லாம் வருதல் பொருட்டு அகிலமே பாதுகாப்பு பெறுவதோடு
அனைவருக்கும் ஆனந்தமான ஞானவாழ்வாக சித்திக்க நேரும்
சித்தி தரும் ஒரே ஞானி அரங்கன் சிந்தை தெளிவிக்கும் மாதவசி ஞான தேசிகன்
உத்தமமாய் அரங்கன் திருவடி பணிந்தால் உலகுக்கே மாற்றம் சடுதி காணும்
5. காணவே அரங்கனுள் யான் கருணைபட இருந்து வழி நடத்த
ஞானம் வேண்டி வரும் மக்களெல்லாம்
நம்பிக்கை வைத்து ஓங்காரக்குடில் வந்தால் போதும்
போதுமப்பா அனைவருக்கும் ஆற்றல் மாற்றமாக வந்தடையும்

அறிவித்த ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–